**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 14.10.2025**
**OS. No. 37/2023**
**வழக்கு சாட்சி PW.1–பழனிசாமி, த/பெ.குஞ்சப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) பிரதிவாதி ஆட்களை வைத்துகொண்டு என் சொத்தை என்னிடம் இருந்து அபகரிக்க முயற்சி செய்கிறார் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சொத்தின் சர்வே எண் என்னவென்றால் நான் படிக்கவில்லை, அதனால் எனக்கு தெரியவில்லை. என் வழக்குரை சொத்துவிவரத்தில் ச.எண்.42/1B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.4281B க்கு உண்டான ஆவணங்களை தான் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 அ–பதிவேட்டில் ச.எண்கள்.48/1B2, 48/1B4, 48/1B7 என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்திற்குண்டான ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் தான் நான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். பிரதிவாதி தங்வேலுவின் நிலத்திற்கும், என்னுடைய நிலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய சொத்துக்களுக்குண்டான வீட்டுவரி ரசீது, தண்ணீர் வரி ரசீது ஆகியவை உள்ளதா என்றால் உள்ளது. ராஜமுத்து எனக்கு விற்பனை செய்ததாக உறுதி அளித்தார் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு எழுத்துபூர்வமான ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளரா என்றால் இல்லை. நான் அவரது நிலத்தை நீண்ட காலமாக குத்தகைக்கு எடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

3) பிரதிவாதி பிரச்சனை செய்ததாக சொல்வதற்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி எந்த பிரச்சனையும் செய்யததால் தான்

நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ராஜமுத்துவிற்கு நான் குத்தகை பணம் செலுத்தியதற்கான ரசீது உள்ளதா என்றால் இல்லை. ராஜமுத்துவை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து என் தரப்பு சாட்சியாக விசாரிக்க இயலுமா என்றால் இல்லை, பிரதிவாதி அவரை மிரட்டி வருகிறார். ராஜமுத்துவாவது மிரட்டியது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. ராஜமுத்து எனக்கு சொத்தை விற்பதாக கூறியதற்கு கிரைய ஒப்பந்தம் ஏதேனும் ஏற்படுத்திகொண்டோமா என்றால் இல்லை, எனக்கு அது குறித்து தெரியாது.

4) பிரதிவாதி தங்கவேலுவிற்கு ராஜமுத்து வகையறா அவர்களது சொத்தை தான் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல, அடமானம் தான் வைத்துள்ளார்கள், ஆனால் பிரதிவாதி தங்கவேலு அந்த சொத்தை ஸ்ரீமுருகன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். நான் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிப்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றும், ராஜமுத்து வகையறா பிரதிவாதி தங்கவேலுவிற்கு சொத்தை பொறுத்து கிரையம் தான் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

5) எங்கள் தரப்பில் பிரதிவாதி தங்வேலுவிற்கு கிரையம் எழுதி கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்திலிருந்து நகல் எடுத்து பெற்றுள்ளோம் என்றும், அதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது. என்னுடைய சொத்திற்கு இணை காடு தான் பிரதிவாதியின் நிலம் என்றால் சரிதான். அது தற்போது அவர் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். ராஜமுத்து தற்போது நல்ல மனநிலையில் தான் உள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தங்வேலு பிரச்சனை செய்வது குறித்து ராஜமுத்துவிடம் நான் முறையிட்டேனா என்றால் முறையிட்டேன், பிரதிவாதி அவரையும் மிரட்டினார். நான் சொல்லும் சாட்சியம் தவறு என்றும் ராஜமுத்து பிரதிவாதி தங்வேலுக்கு சொத்தை கிரையம் கொடுத்துவிட்டதால் தான் எதுவும் கேட்க முன்வரவில்லை என்றும், எங்கள் தரப்பில் சாட்சியம் அளிக்கவும் முன் வரவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி தங்வேலுவின் நிலத்தில் அவர் அனுபவத்தில்

இருப்பதை தொந்தரவு செய்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி தங்வேலுவின் நிலத்தில் வனத்துறையால் 60 தேக்குமரங்கள் வைக்கப்பட்டிருந்தது என்றும், அதை நான் பிடிங்கி எறிந்துவிட்டேன் என்றால் சரியல்ல, எங்கள் ஊரில் தேக்குமரங்களே இல்லை.

6) என் வழக்குரையில் தாவா சொத்தை தவிர வேறு எந்த சொத்தும் எனக்கு இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், என் குடும்ப சொத்து தவிர வேறு இல்லை. நான் சொல்வது தவறு என்றும், என்னுடைய பாக நிலத்திற்கு கிழக்கு என்று குறிப்பிட்டு உள்ளதால் எனக்கு வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரியல்ல, எனக்கு பாகமாக மூன்று நிலங்கள் கிடைக்கப்பெற்றது. என்னுடைய நிலமான ச.எண்.42/1B க்கு தெற்கில் எனக்கு நிலம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி தங்வேலு என் நிலத்தில் அத்துமீறி நுழைய 25.12.2022 ம் தேதியில் முற்பட்டதாக நான் வழக்குரையில் சொல்லியுள்ளதற்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்னை மிரட்டும் போது யாரேனும் உடன் இருந்தனரா என்றால் இருந்தார், இரவு 9.00 மணிக்கு என்னை மிரட்டியபோது ஆறுமுகம் என்பவர் உடன் இருந்தார். அந்த ஆறுமுகத்தை என் தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் உள்ளோம். எங்களுக்குள் பஞ்சாயத்து நடந்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அவர்களை சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்க இயலுமா என்றால் இல்லை, அவர்கள் வெளியூரில் உள்ளார்கள்.

7) பிரதிவாதி அவருடைய நிலத்தை வருவாய் துறையினர் உதவியுடன் அளக்க முற்பட்டபோது நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. நிலத்தை அளக்க யாரும் வரவில்லை. வருவாய் துறையினர் வந்தார்கள் என்றும், அவர்களை கல்லால் நான் அடித்து விரட்டினேன் என்றும், இது தொடர்பாக பிரதிவாதி புகார் அளித்து காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல, யாரும் என்னை விசாரிக்கவில்லை. ராஜமுத்து எனக்கு நிலத்தை விற்காததால் பிரதிவாதியின் மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய நிலத்தை அளக்க வருவாய் துறையினரை அழைத்து வருவதில் எனக்கு

ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது, அந்த சமயத்தில் எனது சித்தப்பா மகன் ராஜமுத்துவும் வரவேண்டும். ராஜமுத்து பிரதிவாதி தங்வேலுவிற்கு நிலத்தை விற்பனை செய்துவிட்டதால் அவர் நிலத்தை அளக்க வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

8) பத்திரப்படி அளக்க எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது, ராஜமுத்துவும் வரவேண்டும். ராஜமுத்துவை நான் அழைத்து வர இயலுமா என்றால் பிரதிவாதி தான் அழைத்து வரவேண்டும். தாவா சொத்திற்குரிய ஆவணங்களை முரண்பாடாக தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.